ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2471/09 - 2026 ජනවාරි මස 12 වැනි සඳුදා - 2026.01.12
2471/09 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2013, மே மாதம் 14 ஆந் திகதிய 1810/24 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 141 ஆம் இலக்கக் கட்டளையில் குறிப்பிட்ட காணித் துண்டினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக்காணித் துண்டின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், அச்சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : LD/05/2008/HW/97-II.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல.: DSM/YT/LAND/ை/ 1612/18.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, திசெம்பர் 19.

**அட்டவணை**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், யட்டவத்த பிரதேச செயலாளர் பிரிவில், இல. E337B - டன்கன்


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பிளேஸ் கிராம அலுவலர் பிரிவில், டன்கன் பிளேஸ் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆ. வ. மா. 1612 இல் துண்டு இல. 23 (9.2 பேர்ச்) விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள் :

**01. துண்டு இல. 23 – டன்கன் வத்தை - விஸ்தீரணம் : 9.2 பேர்ச்**

வடக்கு : ஆ. வ. மா. 314 இல் துண்டு இல. 1 ; கிழக்கு : வீதி அபிவிருத்தி அதிகார சபை, துண்டு இல. 19 மற்றும் 24 ; தெற்கு : துண்டு இல. 19, 24, 17 மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ; மேற்கு : சீ. கே. கம்லத் உரிமை கோரும் டன்கன் வத்தை மற்றும் ஆ. வ. மா. 314 இல் துண்டு இல. 1.

EOG 01 - 0112